### புதிதாக பெயர் சேர்க்க 13 லட்சம் பேர் விண்ணப்பம்!

# வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்க ஜன.30 வரை அவகாசம்!

## இறுதி வாக்காளர் பட்டியல் பிப்ரவரி 17-ஆம் தேதி வெளியிடப்படும்!

சென்னை, ஜன. 20 -

தமிழ்நாட்டில் வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்க, திருத்தம் மேற்கொள்ள ஜனவரி 30ஆம் தேதி வரை விண்ணப்பிக்கலாம் என காலஅவகாசத்தை நீட்டித்து தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

தமிழ்நாட்டில் கடந்த டிசம்பர் 19ம் தேதி வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட்டது. அதில் 97 லட்சத்து 37 ஆயிரம் வாக்காளர்களின் பெயர்கள் நீக்கப்பட்டன. வாக்காளர்களின் எண்ணிக்கை 6 கோடியே 41 லட்சத்தில் இருந்து, 5 கோடியே 43 லட்சமாக குறைந்தது. வரைவு வாக்காளர் பட்டியலில் இடம் பெறாதவர்கள், வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்க பல்வேறு கட்டங்களாக சிறப்பு முகாம்கள் நடத்தப்பட்டன.

அவகாசம் முடிவடையும் நிலையில், வாக்காளர் பட்டியலில் புதிதாக பெயர் சேர்க்க 13 லட்சத்திற்கும் மேற்பட்டோர் பேர் விண்ணப்பித்துள்ளதாக தேர்தல் ஆணையம் தெரிவித்தது.

இந்நிலையில், தமிழ்நாட்டில் வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்க, திருத்தம் மேற்கொள்ள வருகிற ஜனவரி 30ஆம் தேதி வரை விண்ணப்பிக்கலாம் என காலஅவகாசத்தை நீட்டித்து தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது. பிப்ரவரி 17ம் தேதி இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட உள்ளது.

### கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் தலைமையில் – இன்று

# தி.மு.க. மாவட்டக் கழகச் செயலாளர்கள் கூட்டம்!

## பொதுச்செயலாளர் துரைமுருகன் அறிவிப்பு!



கழகத் தலைவர் **மு.க.ஸ்டாலின்** அவர்கள் தலைமையில் **“தி.மு.க. மாவட்டக் கழகச் செயலாளர்கள் கூட்டம்” இன்று** (20.01.2026 - செவ்வாய்க்கிழமை) மாலை 6.30 மணி அளவில், சென்னை, அண்ணா அறிவாலயம் கலைஞர் அரங்கில் நடைபெறுகிறது.

அதுபோது மாவட்டக் கழகச் செயலாளர்கள் மற்றும் கழக நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**பொருள் : 2026 சட்டப்பேரவைத் தேர்தல்**

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18

# நீர்வளம் பெருக - நீர்நிலைகளைக் காத்திட கழக ஆட்சியில் 43 அணைகள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை... முதல் பக்கத் தொடர்ச்சி

சென்னையின் வளர்ந்து வருகின்ற பகுதிகளுக்காக நம்முடைய அரசு செய்த முக்கியமான பணியாக வரலாற்றில், இந்த நிகழ்வு நினைவுகூரப்படும். பொதுவாக, சிலர் உண்மை தெரிந்தும், பலர் உண்மை தெரியாமலும், “நம்முடைய கழக ஆட்சியில், அணைகளை கட்டவில்லை” என்று ஒரு பொய்யை சொல்லுவார்கள். ஆனால், உண்மை நிலை என்ன? நம்முடைய முத்தமிழிலும் கரைகண்ட தலைவர் கலைஞர் அவர்கள் தமிழ்நாட்டின் நீர் நிலைகளைக் காக்கக் கூடிய செயல்பாடுகளையும் அதிகமாக செய்திருக்கிறார்.

**தமிழ்நாட்டில் கழக ஆட்சியில் 43 அணைகள் கட்டி சாதனை!**

1967ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்ததில் இருந்து, 2011 வரை நம்முடைய தமிழ்நாட்டில், 43 அணைகள் கட்டப்பட்டிருக்கிறது. அதைப் பட்டியலோடு பெயர்களோடு சொல்ல வேண்டும் என்று சொன்னால்,

- உப்பாறு
- சிற்றாறு1
- சிற்றாறு2
- பெருவாரிப்பள்ளம்
- சோலையாறு
- பொன்னனணியாறு
- கருப்பாநதி
- இராமநதி
- பரப்பலாறு
- மேல்நீராறு
- பிளவக்கல் கோவிலாறு
- பிளவக்கல் பெரியாறு
- குடகணாறு
- பாலாறு பொருந்தலாறு
- குண்டேரிப்பள்ளம்
- வரதமாநதி
- வட்டமலைகரை ஓடை
- மருதாநதி
- வரட்டுப்பள்ளம்
- கீழ்நீராறு
- குண்டாறு
- குதிரையாறு
- ஆணைக்குட்டம்
- இராஜாத்தோப்பு
- சோத்துப்பாறை
- மோர்தானா நீர்த்தேக்கம்
- அடவி நயினார்
- பொய்கையாறு
- வடக்கு பச்சையாறு
- சாஸ்தா கோவில்
- கடனா நதி
- நம்பியாறு
- சண்முகா நதி
- மிருகண்டா நதி
- கமண்டலநதி
- வண்டல் ஓடை
- ஆண்டியப்பனூர்
- நல்லதங்காள்
- நங்கஞ்சியாறு
- சிறுமலையாறு
- இருக்கன்குடி
- குப்பநத்தம்
- மாம்பழத்துறை ஆறு

- இப்படி, 43 நீர்த்தேக்கங் களை உருவாக்கியவர்தான் நம்முடைய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்!



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (19.1.2026) செங்கல்பட்டு மாவட்டம், நெம்மேலியில் நீர்வளத்துறை சார்பில் நடைபெற்ற மாமல்லன் நீர்த்தேக்கம் அடிக்கல் நாட்டு விழாவில், மாநிலம் முழுவதும் நீர்நிலைகளை புனரமைத்து பாதுகாத்து சிறப்பான முறையில் செயலாற்றிய தன்னார்வ தொண்டு நிறுவனங்களுக்கு (NGO) சிறந்த நீர் பாதுகாத்தல் விருதுகளை (Best Water Conservation Award) வழங்கி சிறப்பித்தார்.

**நீர்வளம் பெருக்க பல்வேறு நடவடிக்கைகள்!**

நம்முடைய திராவிட மாடல் ஆட்சி அமைந்து, நீர்வளம் பெருக்க பல நடவடிக்கைகளை நாம் தொடர்ந்து எடுத்துக் கொண்டு வருகிறோம்.

- கடந்த ஐந்து வருடமாக மேட்டூர் அணை முழு கொள்ளளவு எட்டப்பட்டு, குறித்த நேரத்தில் திறந்து வைத்திருக்கிறோம்.
- 2021-25 ஆகிய ஐந்து ஆண்டுகளில், காவிரி டெல்டா பகுதிகளில், தூர்வாரக்கூடிய பணிகள் 459 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நடைபெற்றிருக்கிறது. 24 ஆயிரத்து 833 கிலோமீட்டர் நீளத்திற்கு சிறந்த முறையில், இவை செயல்படுத்தப்பட்டிருக்கிறது. இதனால், கடைமடை வரை விவசாயிகள் பயனடைந்தார்கள்.
- மாநிலம் முழுவதும் புதிதாக 121 தடுப்பணைகள் அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.
- 63 அணைக்கட்டுகள் அமைக்கக்கூடிய பணிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

இதில், மிக மிக முக்கியமானது

- தாமிரபரணி கருமேனியாறு நம்பியாறு இணைப்பு கால்வாய் திட்டம். கடந்த ஆண்டு பிப்ரவரி 7ஆம் நாள் துவங்கப்பட்டு மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டது.
- ஐந்தாண்டுகளில், 9 டி.எம்.சி. நீர் வறட்சிப் பகுதியான திசையன்விளை மற்றும் சாத்தான்குளம் வரை கொண்டு செல்லப்பட்டிருக்கிறது.
- ஊரக வளர்ச்சித்துறை மூலமாக, தமிழ்நாட்டில் அனைத்து மாவட்டங்களிலும், 47 ஆயிரத்து 920 ஏரிகள் மற்றும் 1 இலட்சத்து 33 ஆயிரத்து 967 கிலோமீட்டர் கால்வாய்களை தூர் வாரும் பணிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

இந்த வரிசையில்தான், சென்னை மாநகரத்தில், பெருகிவரும் குடிநீர் தேவையை கருத்தில் கொண்டு, மற்றுமொரு புதிய நீர்த்தேக்கமான நம்முடைய திராவிட மாடல் ஆட்சி இதை அமைத்திருக்கிறது. 342 கோடியே 60 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், இது அமைக்கப்பட இருக்கிறது.

**சென்னை மாநகரில் புதிய நீர்த்தேக்கம்!**

செங்கல்பட்டு மாவட்டம் திருப்போரூர் மற்றும் திருக்கழுக்குன்றம் வட்டங்களில், கிழக்கு கடற்கரைச் சாலைக்கும் பழைய மாமல்லபுரம் சாலை எனும் ராஜீவ் காந்தி சாலைக்கும் இடையில் இருக்கின்ற கோவளம் உப வடிநிலத்தில், இந்த புதிய நீர்த்தேக்கம் அமைய இருக்கிறது. இந்தத் திட்டத்தை எப்படிச் செயல்படுத்தப் போகிறோம் என்று ஏற்கனவே நீங்கள் வீடியோவில் பார்த்திருந்தாலும், மீண்டும் இந்த நிகழ்ச்சியில் சொல்ல விரும்புகிறேன்.

மானாமதி குழும 69 ஏரிகளில் இருந்து வரும் உபரி நீர் கடலில் கலக்காமல், இந்த நீர்த்தேக்கம் அமைக்கப்பட இருக்கிறது.

திருவிடந்தை முதல் கோகிலமேடு வரை 5 ஆயிரத்து 161 ஏக்கர் பரப்பளவில் இது அமையப் போகிறது.

மொத்தம் 1.65 டி.எம்.சி. கொள்ளளவில், 34 கிலோமீட்டர் நீளமுள்ள கரை மற்றும் நீர் ஒழுங்கியத்துடன் கூடிய புதிய நீர்த்தேக்கம் அமைக்கப்பட இருக்கிறது.

இந்தத் திட்டத்தின் வாயிலாக, நாள் ஒன்றுக்கு 170 மில்லியன் லிட்டர் குடிநீரை நம்மால் மக்களுக்கு வழங்க முடியும்.

சென்னையின் புதிய அடையாளங்களாக, மிக வேகமாக உருவெடுத்திருக்கின்ற பகுதிகளான சோழிங்கநல்லூர், மேடவாக்கம், பள்ளிக்கரணை, சிறுசேரி, கேளம்பாக்கம், திருப்போரூர், மாமல்லபுரம் ஆகிய பகுதிகளில் வசிக்கின்ற 13 இலட்சம் மக்களுக்கு குடிநீர் வழங்குவதற்கு இது பயன்படும்.

சுற்று வட்டாரத்தில் இருக்கின்ற திருவிடந்தை, கோகில மேடு, மாமல்லபுரம், திருப்போரூர் தண்டலம், பையனூர் ஆகிய பகுதிகளில், நன்னீரை தேக்கி, கடல் நீர் உட்புகுதலை தடுத்து, நிலத்தடி நீரின் மட்டம் மற்றும் அதன் தரம் மேம்படும்.

இந்த பகுதியில் உள்ள பக்கிங்காம் கால்வாய் 15 கிலோமீட்டர் நீளம் 311 ஏக்கர் பரப்பளவில் சீரமைப்பதால், உவர் நீர் மீன் வளத்தை நம்பியிருக்கின்ற மீனவர்களின் வாழ்வாதாரம் மேம்படும்.

மேலும், அந்த பகுதியில் வசிக்கின்ற மீனவர்களுக்கு மீன் பிடி உரிமம் வழங்கப்படும்.

**மாமல்லன் நீர்த்தேக்கம் பொருத்தமான பெயர்!**

தொண்டை மண்டலத்தில், காஞ்சிபுரத்தைத் தலைநகரமாக கொண்டு கி.பி. மூன்றாம் நூற்றாண்டு முதல் ஒன்பதாம் நூற்றாண்டு வரை பல்லவர்கள் சிறப்பாக ஆட்சி செய்தார்கள். மகேந்திர வாடி, உத்திரமேரூர், தென்னேரி, தூசி மாமண்டூர் போன்ற 39 ஏரிகளை பல்லவர்கள் உருவாக்கியிருக்கிறார்கள். ஏரி வாரியம் அமைத்து உணவு மற்றும் நீர் பாதுகாப்பை தொண்டை மண்டலத்தில் உறுதி செய்தார்கள்.

பல்லவர்களில், ‘மாமல்லன்’ என்று போற்றப்படுகின்ற முதலாம் நரசிம்மவர்ம பல்லவன் உருவாக்கிய மாமல்லபுரம் அருகில், இந்த நீர்த்தேக்கம் அமைவதால், “மாமல்லன் நீர்த்தேக்கம்” என்று இதற்கு பெயர் சூட்டுவதுதான் பொருத்தமாக இருக்கும் என்று நான் கருதுகிறேன்!

சென்னையைச் சுற்றி செம்பரம்பாக்கம் ஏரி, புழல் ஏரி, சோழவரம் ஏரி, பூண்டி ஆகியவை இருக்கிறது. இப்போது கூடுதலாக மாமல்லன் நீர்த்தேக்கமும் அமைய இருக்கிறது.

ஒரு நாட்டிற்கு நிதி மேலாண்மையைப் போலவே, இப்போது நீர் மேலாண்மையும் மிக மிக முக்கியம்! அந்த நீர் மேலாண்மைக்கு மிக மிக அதிக முக்கியத்துவம் வழங்க வேண்டும் என்று உணர்ந்து செயல்படுகின்ற ஆட்சி தான் இந்த ஆட்சி.

நீர் நிலைகளை மாசுபடாமல் காத்து வருகிறோம். நிலத்தடி நீரைப் பெருக்க அனைத்து முயற்சிகளையும் எடுக்கிறோம். கடல்நீரை குடிநீராக்கவும் முயற்சி செய்கிறோம்.

அரசு என்னதான் ஒரு பக்கம் நடவடிக்கைகள் எடுத்தாலும், மக்களுக்கும் இதில் கடமை இருக்கிறது. அதனால்தான், சமூக பொறுப்புணர்வு நடவடிக்கைகளை ஊக்குவிக்கின்ற நோக்கில், சிறப்பாக செயல்படுபவர்களுக்கு விருதுகளை தொடர்ந்து வழங்கிக் கொண்டிருக்கிறோம்.

நீர்வளத்துறை மற்றும் பிற துறைகளுடன் ஒருங்கிணைந்து, தமிழ்நாட்டில் அனைத்து மாவட்டங்களிலும் இருக்கின்ற கால்வாய்கள் மற்றும் நீர்நிலைகளை தூர்வாரி, பொதுமக்கள் மற்றும் விவசாயி களின் நீண்டகால பயன்களைப் பெறும்வகையில், நிலையான நீர்வள மேலாண்மையினை உறுதி செய்யக்கூடிய அரசு சாரா தன்னார்வத் தொண்டு நிறுவனங் களின் பணிகளைப் பாராட்டி இன்றைக்கு ‘சிறந்த நீர் பாதுகாத்தல்’ விருதை வழங்கியதில் நான் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன்.

**சென்னையின் முகம் மாறும் அளவிற்கு திட்டங்கள்!**

தலைநகர் சென்னைக்காக எத்தனையோ திட்டங்களை நம்முடைய கழக அரசு செய்து கொடுத்திருக்கிறது!

அண்ணா மேம்பாலம் தொடங்கி, டைடல் பார்க் வரை 100க்கும் மேலாக என்னால் பட்டியல் போட்டு சொல்ல முடியும்.

கடந்த 5 ஆண்டுகளிலும், சென்னையின் முகமே மாறும் அளவுக்கு அனைத்து வகையான வளர்ச்சித் திட்டங்களையும் நிறைவேற்றிக் கொண்டிருக்கிறோம்!

அடுத்தடுத்து, நிறைய, தொடர்ந்து வரிசையாக திறப்பு விழா காண காத்துக் கொண்டிருக்கிறது!

இன்றைக்கு நான் தொடங்கிய இந்த நீர்த்தேக்கப் பணி மக்களுக்கு காலந்தோறும் வாழ்வளிக்கப் போகிறது. அந்தப் பெருமை உணர்வோடு என்னுடைய உரையை இந்த அளவோடு நிறைவு செய்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

### ரூ.525 கோடியில் முட்டுக்காட்டில் அமைக்கப்பட்டு வரும்

# ‘கலைஞர் பன்னாட்டு மாநாடு மையம்!’ கட்டுமானப் பணிகள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆய்வு!

சென்னை, ஜன.20-

**செங்கல்பட்டு மாவட்டம், முட்டுக்காட்டில் ரூ.525 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுவரும் “கலைஞர் பன்னாட்டு மாநாடு மையம்” கட்டுமானப் பணிகளை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆய்வு செய்தார்.**

முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (19.1.2026) பொதுப்பணித் துறை சார்பில் செங்கல்பட்டு மாவட்டம், முட்டுக்காடு, கிழக்கு கடற்கரை சாலையில் 37.99 ஏக்கர் நிலப்பரப்பில் 525 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுவரும் உலகத்தரம் வாய்ந்த கலைஞர் பன்னாட்டு மாநாடு மையத்தின் கட்டுமானப் பணிகளை பார்வையிட்டு, ஆய்வு செய்தார்.

சென்னை, கலைவாணர் அரங்கத்தில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினையொட்டி 2.6.2023 அன்று நடைபெற்ற முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு இலச்சினையை வெளியிட்டு விழாவில், நவீன தமிழ்நாட்டை உருவாக்கிய சிற்பியான தலைவர் கலைஞர் பெயரால், சென்னையில் புதிய உலகத் தரம் வாய்ந்த பன்னாட்டு அரங்கம் அமைக்கப்படும் என்று அறிவித்தார்.

அந்த அறிவிப்பிற்கிணங்க, செங்கல்பட்டு மாவட்டம், முட்டுக்காடு, கிழக்கு கடற்கரை சாலையில் 37.99 ஏக்கர் நிலப்பரப்பில் 525 கோடி ரூபாய் மதிப்பீட்டில், 10,000 நபர்கள் அமரக்கூடிய அளவில் 90,384 சதுர அடி பரப்பளவில் பொருட்காட்சி அரங்கம், 5,000 நபர்கள் அமரக்கூடிய அளவில் 58,104 சதுர அடி பரப்பளவில் மாநாட்டு மண்டபம், 1,500 பார்வையாளர்கள் அமரக்கூடிய வகையில் கலையரங்கம் உள்ளிட்ட பல்வேறு வசதிகளுடன் 5,12,800 சதுர அடி மொத்த பரப்பளவில் கட்டப்பட்டுவரும் கலைஞர் பன்னாட்டு மாநாடு மையத்திற்கு முதலமைச்சர் அவர்கள் 29.5.2025 அன்று அடிக்கல் நாட்டினார்.

இந்த கலைஞர் பன்னாட்டு மாநாட்டு மையம் முழுவதும் குளிரூட்டும் வசதி மற்றும் மின் ஆக்கி வசதி, மின் தூக்கி வசதி, 1638 சீருந்துகள் மற்றும் 1700 இருச்சக்கர வாகனங்கள் நிறுத்தும் வசதி உள்ளிட்ட பல்வேறு வசதிகளுடன் கட்டப்பட்டுவருகிறது.

தற்பொழுது பொருட்காட்சி அரங்கம், மாநாட்டு மண்டபம் மற்றும் கலையரங்கத்தின் பார்வையாளர் மாடம், மேடைகள் அமைக்கும் பணிகள் முடிவுற்று மேற்கூரைகள் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

இத்துடன் வெளிப்புற பணிகளான சுற்றுச்சுவர், அணுகு சாலைகள், வாகன நிறுத்துமிடம் மற்றும் மின் விளக்கு வசதிகள் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்பட்டு 2026 நவம்பர் மாதம் மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வர திட்டமிடப்பட்டுள்ளது.

இக்கட்டுமானப் பணிகளை ஆய்வு மேற்கொண்ட முதலமைச்சர் அவர்கள், பணிகளை தரமாகவும், விரைவாகவும், குறித்த காலத்திற்குள் முடித்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவர வேண்டும் என்று அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வின்போது, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், பொதுப்பணித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மங்கத் ராம் சர்மா, செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி தி. சினேகா, பொதுப்பணித் துறை முதன்மை தலைமை பொறியாளர் எஸ். மணிவண்ணன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

# தமிழ்நாடு சட்டமன்றம் இன்று கூடுகிறது!



சென்னை,ஜன.20-

ஒவ்வொரு ஆண்டும் தமிழ்நாடு சட்டசபையின் முதல் கூட்டம் ஆளுநர் உரையுடன் தொடங்குவது மரபாக இருந்து வருகிறது. அந்த வகையில், இந்த ஆண்டின் முதல் சட்டசபைக் கூட்டம் இன்று (செவ்வாய்கிழமை) காலை 9.30 மணிக்கு கூட இருக்கிறது. இதில் பங்கேற்று உரையாற்றுவதற்காக ஆளுநர் ஆர்.என்.ரவி ஆளுநர் மாளிகையில் இருந்து புறப்பட்டு காலை 9.25 மணிக்கு தலைமைச்செயலகம் வருகிறார். தலைமைச் செயலகத்தில் ஆளுநருக்கு போலீஸ் அணிவகுப்பு மரியாதை அளிக்கப்படுகிறது.

பேரவைத் தலைவர் மு.அப்பாவு அவர்கள் ஆளுநருக்கு சால்வை அணிவித்து, பூங்கொத்து கொடுத்து வரவேற்று பேரவைக்கு அழைத்துச் செல்கிறார். காலை 9.30 மணிக்கு தமிழ்த்தாய் வாழ்த்து பாடப்படும். அதனைத் தொடர்ந்து, ஆளுநர் ஆர்.என்.ரவி உரை நிகழ்த்துவார்.

ஆளுநர் ஆங்கிலத்தில் உரை நிகழ்த்தி முடித்ததும், அந்த உரையை தமிழில் பேரவைத் தலைவர் மு. அப்பாவு வாசிப்பார். அத்துடன் இன்றைய கூட்டம் நிறைவடையும். தொடர்ந்து, அலுவல் ஆய்வுக்குழுக் கூட்டம் நடைபெறும். இந்தக் கூட்டத்தில் ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதத்தை எத்தனை நாட்கள் நடத்துவது என்பது குறித்து விவாதித்து முடிவெடுக்கப்படும்.